# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/59 - 2019 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2019.10.04

*2143/59 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MLB/LND/LNDAQ/L1/52.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/9/2017/WS/378.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாலிம்படை பிரதேச செயலகப் பிரிவின் கட்டுவங்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் முற்பிரதிப்பட இலக்கம் மாற/2809 வரை படத்தில் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள கீழ்க் குறித்த காணி மாத்தறை iv ஆம் கட்ட நீர் வடிகாலமைப்பு திட்டத்தின் கீழ் ஆழமான கிணறு மற்றும் பம்புமனையொன்றை அமைப்பதற்கு மேலதிக நிலமொன்றை எடுத்துக்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

*01.* **துண்டு இல.** *01*

காணியின் பெயர்: ஹெட்டிகேவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: டி. ஜீ. ரூபிகா தமயன்தி; விஸ்தீரணம்: 0.0308 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாலிம்படை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

கே. ஜீ. ஆர். ஜயனாத்,
பிரதேச செயலாளர்,
மாலிம்படை.

பிரதேச செயலகம்,
மாலிம்படை,
2019, ஒற்றோபர் 02.

10 - 682

---

திருத்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (கூடுதல் சாதாரண) எண் 1713/14 மற்றும் 07.07.2011 ஆந் திகதியிடப்பட்ட அறிவிப்பு பின்வருமாறு திருத்தப்படும் என்பதை நான் இதன்மூலம் தெரிவிக்கிறேன்.

59. **துண்டு இல. 59** - விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

60. **துண்டு இல. 60** - விஸ்தீரணம்: 0.0023 ஹெக்டயார்.

ஐ. ஆர். எம். பிரதீபிகா டி. இலுக்கும்புர,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி,
2019, ஒற்றோபர் 01.

10 - 683